www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06
முன்னிலை: முனைவர் ச.கண்ணப்பன்
ந.க.எண். 004797/ஜ1/2024 , நாள்.12.06.2024

---------

பொருள் – தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி –வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடம் – பதவி உயர்வு மூலம் நியமனம் – 01.01.2024 நிலவரப்படி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிலிருந்து வட்டாரக் கல்வி அலுவலர்களாக பதவி உயர்வு மூலம் நியமனம் செய்ய தகுதிவாய்ந்தோர் இறுதி பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது – பதவி உயர்வு கலந்தாய்வு குறித்து அறிவிப்பு வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை – 1. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.04797/ஜ1/2024, நாள்.01.03.2024, 25.04.2024 மற்றும் 23.05.2024
2. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.04797/ஜ1/2024, நாள்.23.05.2024
3. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.04797/ஜ1/2024, நாள்.12.06.2024

---------

பார்வை 3 கண்டுள்ள செயல்முறைகளில் 01.01.2024 நிலவரப்படி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிலிருந்து வட்டாரக் கல்வி அலுவலராக பதவி உயர்வு மூலம் நியமனம் செய்ய தகுதிவாய்ந்தோர் திருத்திய இறுதி பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது.

வட்டாரக் கல்வி அலுவலர் பதவி உயர்வு கலந்தாய்வு 14.06.2024 அன்று காலை 11:00 மணிக்கு EMIS இணையதளம் மூலம் Online இல் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகங்களில் (தொடக்கக் கல்வி) நடத்தப்படவுள்ளது. பார்வை 3 கண்டுள்ள செயல்முறைகளில் வெளியிடப்பட்ட திருத்திய இறுதி தகுதிவாய்ந்தோர் பெயர் பட்டியலில் முன்னுரிமை எண்.1 முதல் 175 வரையில் இடம்பெற்றுள்ள அனைத்து நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களையும் இக்கலந்தாய்வில் தவறாமல் கலந்துக்கொள்ள அறிவுறுத்துமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இக்கலந்தாய்வினை தங்களது அலுவலகத்தில் நடத்திட தேவையான அனைத்து முன் ஏற்பாடுகளையும் மேற்கொண்டு தயார் நிலையில் இருக்குமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)